DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.388/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | திருநாவுக்கரசு (Lw - 9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 22.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராம் மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா ஆகியோரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 09.08.2024ம் தேதி 19.10 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராம் என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது சேந்தமங்கலம் அரசு மருத்துவமைனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பூபதி என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி பூபதியை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய கு.எண்.173/2024, BNS பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு

அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா அவர்களின் பார்வைக்கு வைத்தார். **(**புகார் மனு அ**.**சா**.**ஆ**.3** ஆகவும்**,** முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.4** ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது**.)**

வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா கடந்த 10.08.2024ம் தேதி பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தனபால், பெருமாள் ஆகியோா் முன்னிலையில் சம்பவ இடத்தை பாா்வையிட்டு மாதிரி வரைபடம், பாா்வை மகஜா் தயாா் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றாா். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட 92 செ.மீ. நீளமுள்ள கடப்பாரை கம்பி மற்றும் உடைந்த நிலையில் இருந்த POCO செல்போன் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **(**கைப்பற்றுதல் மகஜர் அ,சா**.**ஆ**.**7 ஆகவும்**,** படிவம் **91** அ**.**சா**.**ஆ**.8** ஆகவும்**, 92** செ**.**மீ**.** நீளமுள்ள கடப்பாரை கம்பி அ**.**சா**.**பொ**.1** ஆகவும்**,** உடைந்த நிலையில் உள்ள **POCO** செல்போன் அ**.**சா**.**பொ**.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னா் சாட்சிகள் பூபதி, லட்சுமி, பிரியா, பெருமாள், தனபால் ஆகியோா்களை விசாாித்து வாக்குமூலம் பதிவு செய்தாா். பின்னா் கடந்த 18.08.2024ம் தேதி காவல்நிலையத்தில் ஆஜராகும்படி எதிரிக்கு BNSS சட்டபிரிவு 35ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு மேற்படி அறிவிப்பின் பேரில் எதிரி செந்தில் நிலையத்தில் ஆஜரானதால் அவர்கைது செய்யப்படவில்லை.

09.10.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சங்கீதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றார். **(**விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ**.,**சா**.**ஆ**.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராமை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS பிரிவுகள் 296(b), 324(2), 118(1), 351(3) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தாா்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சொல்லும் நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், வாதி கொடுத்த பொய்யான புகாரின் பேரில் போடப்பட்ட வழக்கிற்காக ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**